பக்கங்கள் 17

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 04 புதன்கிழமை 20.12.2023 அதிர்வு 142

## துன்னாலையில் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி – துன்னாலை கிழக்குப் பகுதியில்,

04

### கொலைக் கலாசாரம் ராஜபக்ஷக்களுக்குப் புதியதல்ல

# மொட்டுவின் மாநாட்டில் பங்கேற்றவர்களை உடனடியாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துக!

### மிகிந்தலை விகாராதிபதி வலியுறுத்து

“கொலைக் கலாசாரம் என்பது ராஜபக்ஷ குடும்பத்துக்குப் புதிய விடயமல்ல. பஸில் ராஜபக்ஷவின் மொட்டுக் கட்சி மாநாட்டு உரை இதனையே வெளிப் படுத்துகின்றது. இந்த மாநாட்டில் பங்கேற்றவர்களை உடனடியாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும்.”

04





# பாடசாலை மாணவியைக் கடத்தி வன்புணர்ந்த இராணுவச் சிப்பாய்

### புத்தளத்தில் கொடூரம்; சந்தேகநபர் கைது

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – நவகத்தேகம , வெம்புவெவ பகுதியில் உள்ள 14 வயது பாடசாலை மாணவியைப் பலவந்தமாகக் கடத்திப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் இளம் வயது இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருவிட்ட, கெமுனுஹேவா பலகாயவில் பணியாற்றும் வஹரக – தலழுவெல பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இராணுவச் சிப்பாயே

04







# யாழ். பல்கலை சிங்கள மாணவன் போதை மாத்திரைகளுடன் கைது!

## விசேட அதிரடிப் படையினரின் முற்றுகையின்போது சிக்கினார்

**(எஸ்.நிதர்ஷன்)**

போதை மாத்திரை மற்றும் தடை செய்யப்பட்ட லேகிய பைகளுடன் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட சிங்கள மாணவன் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் இன்று கோண்டாவில் பகுதியில் உள்ள வாடகை அறையில் வைத்து கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய கோண்டாவில் ரயில்வே கடவைக்கு அண்மையாக பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியுள்ள வாடகை அறையை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது 55 தடை செய்யப்பட்ட லேகிய பைகளையும். 11 போதை மாத்திரைகளையும் அவர்கள் கைப்பற்றினர்.

இதேவேளை, இதனை விற்பனை செய்யும் நோக்கில் உடமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 23 வயதான யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட சிங்கள மாணவன் ஒருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைது செய்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கோப்பாய் பொலிஸார் மேற்படி சிங்கள மாணவனுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் பாடசாலைக்கு அருகில் போதை வியாபாரம் செய்த அறுவர் கைது

## வாங்கிய மாணவர்களும் மாட்டினர்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அவர்களிடம் போதைப் பொருளைக் கொள்வனவு செய்த 15 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களைப் பொலிஸார் கடுமையாக எச்சரித்ததுடன் போதைப்பொருளுக்கு எதிரான விழிப் புணர்வையும் வழங்கி பெற்றோர்களிடம் கையளித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை



யில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாழ். புறநகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில், மாணவர்களுக்குப் போதை மாத்திரைகள், போதை கலந்த பாக்குகள், மாவா பாக்கு உள்ளிட்ட போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்த குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களிடம் அவற்றை வாங்கி வந்த மாணவர்களைப் பொலிஸார் அடையாளம் கண்டு கொண்டனர்.

அவ்வாறு அடையாளம் காணப்பட்ட 15 மாணவர்களையும் பொலிஸார் கடுமையாக எச்சரிக்கை செய்துடன் போதைப்பொருளுக்கு எதிரான விழிப் புணர்வையும் அவர்களுக்கு ஊட்டி பெற்றோர்களிடம் கையளித்தனர்.

கைது செய்யப்பட்ட 6 இளைஞர்களையும் யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நெல்லியடியிலும் பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் விற்பனை!

## ஹட்டனைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், நெல்லியடிப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலைக்கு அருகில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தி, இரண்டு நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தில் அனுமதி பெற்ற நெல்லியடிப் பொலிஸார், அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

பாடசாலைக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் ஹட்டன் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வேலை செய்து வந்தார். அந்த இளைஞர் கடையில் போதைப்பொருள் வியாபாரத்திலும்

(4ஆம் பக்கம் பார்க்க)



# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு கிளிநொச்சியில் நிவாரண உதவி

கிளிநொச்சி மாவட்டத்தில், வெள்ளப் பேரிடரால் அதி கூடிய பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள 275 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் இன்று (20) நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் வழங்கப்பட்டுள்ளன.

கனடாவில் வசிக்கும் சமூக ஆர்வலரான, சுரேஸ் மகேந்திரனின் நிதியுதவியில், பன்னங்கண்டியைச் சேர்ந்த 150 குடும்பங்கள், கந்தபுரம் ஐயனார் குடியிருப்பில் வசிக்கும் 50 குடும்பங்கள், விநாயகர் குடியிருப்பில் வசிக்கும் 75 குடும்பங்கள் உள்ளிட்ட 275 குடும்பங்களுக்கே இந்த முதற்கட்ட நிவாரணஉதவிகள்வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது, தமது இடர்நிலை உணர்ந்து உதவிகளை வழங்கிய சுரேஸ் மகேந்திரனுக்குப் பாதிக்கப்பட்ட மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் மீண்டும் நடைமுறைக்கு வந்த ‘பாஸ்’

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மீண்டும் பார்வையாளர் அனுமதிப் பத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிகரித்த பார்வையாளர்கள் காரணமாகப் போக்குவரத்து நெரிசல்கள், திருட்டுச் சம்பவங்கள், நோய்த்தொற்றுக்கள், நோயாளர் பராமரிப்பில் இடையூறுகள் என்பன அதிகரித்துள்ள நிலையில் பாஸ் மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது.

நேற்றுச் செவ்வாய்கிழமை (19) தொடக்கம் பார்வையாளர் அனுமதிப்பத்திரம் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதாவது ஒரு நோயாளருக்கு தலா இரு அனுமதிப்பத்திரம் எனும் அடிப்படையில் நோயாளரை அனுமதிக்கும் பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும்.

சிறப்பான நோய்ப் பராமரிப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த ஒழுங்குமுறைக்கு அனைத்து பார்வையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 8 தமிழக மீனவர் விடுதலை மன்னார் நீதிமன்றம் தீர்ப்பு

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்வதாக மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 6 ஆம் திகதியன்று இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான 8 மீனவர்களும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதன் பின்னர் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்த மீனவர்கள் இன்று மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

"மீண்டும் எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டால் சிறைத் தண்டனை விதிக்கப்படும்" – என்ற நிபந்தனையின் கீழ் அவர்கள் விடுதலை செய்யப் படுகின்றனர் என்று நீதிவான் தீர்ப்ப ளித்தார். இதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இந்தியத் துணைத் தூதரக அதிகாரியிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளனர்.

# சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்டவர் பொலிஸாரால் கைது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக் கொண்டு வரப்பட்ட விலையுயர்ந்த மதுபானம் மற்றும் வெளிநாட்டு சிகரெட் என்பவற்றுடன் 32 வயது சந்தேக நபர் மோதர, கிம்புலாஅல பிரதேசத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட 5 லட்சம் ரூபா பெறுமதியான விஷேட 25 மதுபான போத்தல்கள் மற்றும் தடைவிதிக்கப்பட்ட 1600 சிகரெட்டுகள் அடங்கிய 80 பெட்டி சிகரெட் என்ப வற்றை மோதர, கிம்புலாஅல பிரதேசத் திலுள்ள வீடொன்றிலிருந்து பொலி



ஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர் 19 ஆயிரம் ரூபாவுக்கு வீடொன்றை வாடகைக்குப் பெற்று மிகவும் இரகசியமான முறையில், நீண்ட காலமாக இந்தச் சட்ட விரோத வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணையின் போது தெரிய வந்துள் ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பாடசாலை...

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று நவகத்தேகம பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள் ளானார் எனக் கூறப்படும் அந்த மாணவி, மருத்துவ பரிசோதனைக்காக ஆனமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான இளம் இராணுவச் சிப்பாயை ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நவகத்தேகம பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### மொட்டுவின்...

– இவ்வாறு மிகிந்தலை விகாரையின் விகாராதிபதியான வலவாஹேனுனவே தம்மரத்ன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

"எம் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தி னால் என்ன நடக்கும் என்பது பற்றி அவர் (பஸில் ராஜபக்ஷ) எச்சரிக்கை விடுத்திருந்தார். அதாவது கொலை செய் யப்படுவீர்கள் என்பதே அந்த எச்சரிக் கையாகும். அவர்கள் (ராஜபக்ஷக்கள்) சாட்சி இல்லாமல் கொலை செய்தனர். இது எமக்கு தெரியும். எவராவது ஒருவர் தலைதூக்கினால் அவரைக் கொலை செய்தனர். கொலைக் கலாசாரத்தை அவர்கள் முன்னெடுத்தனர். இந்தக் கலாசாரத்தை அவர்களுக்கு மீண்டும் வழங்குவதா?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மாநாட்டுக்குச் சென்றவர்களை உடனடி யாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். நாட்டு மக்கள் திண்டாடும் நிலையில், மனச்சாட்சி உள்ள எவரும் அந்த மாநாட்டுக்குச் சென்றிருக்கமாட் டார்கள். எனவே, அவர்களின் மனநிலை புரிகின்றது. எனவே, மொட்டுக் கட்சி மாநாட்டில் பங்கேற்றவர்களை உடனடி யாகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தவும். இது தொடர்பில் புனர்வாழ்வு ஆணை யாளரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்."
– என்றார்.

### நெல்லியடியிலும்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டு வருகின்றார் என்று நெல்லியடிப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப் பெற்றது.

அதன் அடிப்படையில் நேற்று அந்த இளைஞரைக் கைது செய்த பொலிஸ ார், அவரது உடைமையில் இருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர், பருத் தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் இளைஞரை முற்படுத்திய பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண் டியுள்ளதால், சந்தேகநபரை இரண்டு நாள் பொலிஸ் காவலில் வைத்து விசா ரணை செய்வதற்கு அனுமதி வேண் டி மன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

அதை ஏற்றுக்கொண்ட மன்று, சந்தேகநபரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதித்தது.

பொலிஸ் காவலில் சந்தேகநபரை தடுத்து வைத்து விசாரணைகளை முன் னெடுத்துள்ள பொலிஸார், சந்தேகநப ருடன் போதைப்பொருள் விற்பனை வலையமைப்பைச் சேர்ந்தவர்களை அடையாளம் கண்டுள்ளதாகவும், சந் தேகநபரிடம் போதைப்பொருளை வாங்கி வந்தவர்களையும் அடையாளம் கண்டு கொண்டுள்ளதாகவும் , அவர்களையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

### துன்னாலையில்...

51 வயதுடைய பெண் ஒருவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

தனது ஆடைக்குள் ஹெரோயினை மறைத்து வைத்திருந்த நிலையில் நெல்லியடிப் பொலிஸாரால் நேற்று அவர் கைது செய்யப்பட்டார்.

அந்தப் பெண்ணிடம் இருந்து 6 கிராம் அளவுள்ள ஹெரோயின் மீட்கப்பட் டுள்ளது.

சந்தேகநபரைப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 21 லட்சம் ரூபா பெறுமதியான

# 18 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் மன்னாரில் இரண்டு பேர் கைதாகினர்!

(மன்னார் நிருபர்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 18 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் இருவர் இன்று புதன்கிழமை (20) காலை மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்து 18 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தோட்டவெளி மற்றும் தாழ்வுபாடு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது. இதன்போது மீட்கப்பட்ட போதை மாத்திரைபகளின் பெறுமதி 21 லட்சம் ரூபா என்று பொலிஸார் தெரி வித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் போதை மாத்திரைகளுடன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



# காற்றாலையும், கனிய மண் அகழ்வும் இயற்கை இருப்பியலைச் சீர்குலைக்கின்றன

## மன்னார் மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(மன்னார் நிருபர்)

காற்றாலையும், கனிய மண் அகழ்வும் இயற்கையின் இருப்பியலைச் சீர்குலைக்கின்றன என்று மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் இன்றைய தினம் புதன்கிழமை (20) ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

மன்னார் மாவட்டத்தின் தீவுப் பகுதி என்பது சாதாரண தரைத்தோற்றத்தில் இருந்து மிகவும் குறைவான தாழ் நிலப் பிரதேசம் ஆகும். வலிமை குறைந்த கனதியற்ற நொதியமுள்ள தீவு என்பதால்தான் மூன்று மாடிக்கு மேல் கட்டடம் அமைப்பதற்கு மன்னார் தீவு பகுதியில் அனுமதி வழங்குவதில்லை.

ஐம்பது ஆண்டுகளில் நலிவுறும் தீவுகளில் மன்னாரும் ஒன்று என ஏலவே யுனெஸ்கோ நிறுவனம் முன் னெச்சரிக்கை விடுத்திருந்தது.

அவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை அமைப்பதும் கனிய மண் அகழ்வதும் என்பது மேலும் தீவுப் பிரதேசத்தைப் பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

உலகம் முழுவதும் மனிதர்களின் இயற்கைக்கு எதிரான செயற்பாட்டால் புவி வெப்பமயமாதல் அதிகரிப்பால் காலநிலை மாற்றம் ஏற்படுகிறது.



இதனால் பேரிடர் மூலம் கடல் நீர் மட்டம் உயரலாம். அதனால் பல தீவுகள் காணாமல் போகலாம் என்றும் அறிவியலாளர்களால் எச்சரிக்கப்பட்டுள்ளது. டுபாய் காலநிலை மாநாட்டில் தாங்களும் பங்கேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நில அதிர்வோ, சுனாமியோ, பெரு வெள்ளமோ ஏற்பட்டால் தற்காத்துக் கொள்ளக் கூடிய நிலையில் வலிமை இழக்கவைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

காற்றாலையும் கனிய மண் அகழ்வும் ஆழமாகத் துளையிட்டு நிலத்தடியை அதன் இயற்கைத் தரைத்தோற்ற இருப்பியல் ஒழுங்கமைப்பை சீர்குலைக்கும் வேலையாகவே உள்ளன.

இங்கு மிக நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு இது பெரும் வாழ்வியல் கேடாக மாறும். இயற்கையை அழித்து இயல்பை மாற்றிப் பணம் தேட முயல்வது தற்கொலைக்குச் சமமானது ஆகும்.

இங்கு வாழும் மக்களைப் பற்றிய எந்த விதமான நோக்கு நிலையும் இல்லாமல் ஆதாயம் தேட நினைப்பது அரசியல் இழுக்காகும்.

எனவே காலப்போக்கில் மன்னார் தீவுப் பகுதியில் இருந்து மனிதர்களை அப்புறப்படுத்தும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகவே நாம் இதனை நோக்க வேண்டியுள்ளது.

வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு பல் தேசியக் கம்பனிகளுக்கு மன்னார் வளத்தை கூறு போட்டு பெரு வணிகர்களிடம் கை அளித்திருப்பது நாட்டுக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். பூகோள ரீதியாக இந்த நாட்டின் மீது பிராந்திய வல்லரசுகளின் கழுகுப் பார்வைக்குள் அகப்பட்டிருப்பதாலும் வரலாற்று முக்கியத்துவ துறைமுக கட்டமைப்பைக் கொண்டதுமான இத்தீவு எதிர்காலத்தில் நாட்டின் ஏகபோகத்து வத்துக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்த யதார்த்தங்கள் தங்களுக்குப் புரியாமல் அல்ல. ஆகவே கனியவள அகழ்வை முழுமையாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிதாக அமைக்க இருக்கும் காற்றாலையை மன்னார் தீவுக்கு வெளியில் எவருக்கும் பாதிப்பு இல்லாத இடத்தில் நிறுவலாம்.

எனவே பொது மக்களின் உணர்வு பூர்வமான தத்துவார்த்த அடிப்படை இருப்பியல் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை அறிவியல், சமூகவியல் ரீதியாகவும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். இல்லையேல் பொது மக்கள் தமது ஜனநாயக வழி எதிர்ப்பை இடைவிடாது வெளிப்படுத்துவார்கள்.

மக்களிடமுள்ள நீதி பூர்வமான வாழ்வியல் உரிமை, சமூக சமநீதிக் கோட்பாட்டை ஏற்றுணர்ந்து கொள்வீர்கள் என்றும் எமது நியாயமான வேண்டுகையை நிராகரிக்க மாட்டீர்கள் எனவும் நம்புகின்றோம்.– என்றுள்ளது.

இதன் பிரதி இந்தியத் தூதருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மக்களே குற்றவாளிகள்

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு அரசியல் தலைவர்களை மட்டும் குற்றம் கூறும் பண்பியல்பு நமது நாட்டில் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது.

தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்று வேறுபாடின்றி இத்தகைய பொதுப்பண்பியல்புப் போக்குத் தாராளம்.

ஏதோ தலைவர்கள் மாத்திரம்தான் குற்றமிழைத்தவர்கள், மக்கள் நல்லவர்கள் என்று சமாதானம் கூறும் அல்லது மூடி மறைக்கும் நமது பண்பியல்புதான் இந்த நிலைமைக்கு நம்மைக் கூட்டி வந்திருக்கின்றது என்பது சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறைதான் மக்களுக்கு வாக்களிக்கவும், முடிவெடுக்கவும், தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும் வாய்ப்புக் கிட்டுகின்றது என்பது உண்மைதான். மக்கள் நல்லவர்களாக - சரியானவர்களாக - தவறு செய்யும் எண்ணம் இல்லாதவர்களாக - குற்றம் இழைக்காதவர்களாக - இருந்திருந்தால் தவறுகள் ஐந்து ஆண்டுகள்தான் நீடிக்க முடியும். ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் நீடிக்க முடியாது. இப்படி கடந்த 75 ஆண்டுகளாக ஒரே நிலைமை நீடித்திருக்க முடியாது.

அந்த வகையில் பார்த்தால் நாட்டின் இன்றைய நிலைமைக்கு முழுக் காரணம் - முற்றும் முழுக் காரணம் மக்கள்தான். மக்கள் மட்டும்தான்.

நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கத் தங்களுக்குக்கிடைத்த- கிடைக்கும்- சந்தர்ப்பங்களை எல்லாம் சுயநலத்துடனும், நீதி, நியாயமின்றியும், பொறுப்பின்றியும், விட்டேத்தியாகவும் பிரயோகித்து, நாட்டை முற்றிலும் நாசப்படுத்திய பொறுப்பு அவர்களைத்தான் சாரும். அந்தக் குற்றச்சாட்டில் இருந்து அவர்கள் இலகுவில் தப்பி விட முடியாது.

இலங்கையின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகளே காரணமாக உள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவிப்பது வழமையாக அரசியலில் ஓய்வு பெற்றவர்கள், இப்போது அரசியல் செய்பவர்களையும், பழையவர்களையும் குற்றம் சுமத்தப் பயன்படுத்தும் வார்த்தைகளேயன்றி வேறில்லை.

ஆயுதப் போராட்ட அமைப்புகளின் கீழ் கட்டுப்பட்ட மக்கள் மீதாவது இந்தக் குற்றச்சாட்டை சுமத்தாமல் விடலாம். ஏனெனில் ஒரு பேச்சுக்காவது அவர்கள் ஆயுத அடக்குமுறைக்குப் பயந்து, அடங்கி, அப்படிச் செயற்பட்டார்கள் என்று கூறலாம்.

ஆனால், நாட்டைச் சீரழித்தவர்களை தெரிந்து கொண்டும், சுயாதீன- ஜனநாயக- தேர்தல்களில், மாறி மாறி தேடித்தேடி அவர்களைத் தெரிவு செய்த நாட்டு மக்கள் எப்படி தங்களைக் குற்றமற்றவர்கள் என்று பாவ விமோசனம் கோர முடியும்?

இனவாதத்திலும் மதவாதத்திலும் பேரினவாதத்திலும் ஊறி, அதற்காக வாக்களிக்கும் சின்னத்தனமான மனிதர்களாக பொதுமக்கள் இருந்தால், அதனைத் தந்திரமாக பயன்படுத்த அரசியல்வாதிகள் முனைவார்கள்தானே...?

அரசியல்வாதிகள் குற்றம் இழைக்கட்டும் என்று இடமளித்து, பல சமயங்களில் தூண்டி, ஆதரவளித்து, நிற்கும் பொது மக்களே நாடு குட்டிச்சுவரானமைக்குப் பிரதான சூத்திரதாரிகள். அதன் விளைவுகளைத்தான் அவர்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குற்றம் இழைத்தவர்கள் குற்றத்தை உணர்ந்து திருந்தாதவரை மீட்சி கிடைக்காது. மீட்சிக்கு இடமில்லை.

முதலில் குற்றம் இழைத்தோருக்கு, அதை மூடி மறைத்துச் சமாளிப்பதை விடுத்து அதனைப் புரிய வைக்க வேண்டும். அதை அவர்கள் உணர்ந்தால்தான் அடுத்த முறை தவறிழைக்காமல் ஒழுங்காக இருப்பார்கள்.

நடந்த தவறுகளுக்கு அரசியல்வாதிகள் மீது மட்டும் குற்றத்தைச் சுமத்தி, பொறுப்பைப் பொதுமக்கள் ஏற்காமல் தவிர்க்க செய்யும் சந்திரிகா போன்றோரின் முயற்சியும் ஒரு வகையில் குற்றமே.

இந்த நாட்டின் இந்த இழிநிலைமைக்கு இந்நாட்டு மக்களே முழு பொறுப்பு. முற்றிலும் பொறுப்பு. அதனை எடுத்துரைத்து, இடித்துரைத்து, அவர்களுக்கு உணர்த்தி நிற்பதுதான் இன்றைய கட்டாய தேவை. அந்தக் குற்றத்தை உணர்ந்து, இன்னொரு தடவை அதே தவறை அவர்கள் செய்யாமல் இருக்க, அதனை உறைப்பாக நாம் அவர்களுக்கு உரைக்க வேண்டும்.

இனியாவது தலைவர்களைத் தெரிவு செய்வதில் நாட்டு மக்கள் பொறுப்பாக நடக்க வேண்டும். இல்லையேல் அவர்களின் கதி அதோ கதிதான்...!

# காத்தான்குடியில் பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கி வைப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் காத்தான்குடி அலுவலகத்தால் கோழிக்குஞ்சுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆலோசனையின் பேரிலும் வழிகாட்டலிலும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் உதவயுடன் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் இந்தக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள 25 பயனாளிகளுக்கு 15 வீதம் ஒரு மாதம் நிரம்பிய கோழிக் குஞ்சுகள் இதன்போது வழங்கப்பட்டன.



கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாள ரும் காத்தான்குடி அலுவலகத்தின் பொறுப்பதிகாரியு மான டாக்டர் டி. மாஹிர் தலைமை யில் நடைபெற்ற இந்த கோழிக் குஞ்சு கள் வழங்கும் வைபவத்தில் காத்தான் குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு. எல் நசிர்தீன் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# திருமலையில் விவசாய வர்த்தக சந்தை!

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவால் இந்த ஆண்டுக்கான திட்டத்தின் நடமாடும் விவசாய விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி அனுசரனையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விவசாய வர்த்தகச் சந்தை திருகோணமலை பிரதம செயலர் முன்றலில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் இரத்தினாயக்க, கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ. மு. பு. முத்துபண்டா, பேரவைச் செயலக செயலாளர் ஆ. கோபாலரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டிருந்த இந்த நிகழ்வு அமோக வரவேற்பைப் பெற்றிருந்தது.



பயன்தரும் மரக்கறிக் கன்றுகள், பழ மரக்கன்றுகள், மட்பாண்டங்கள் மற்றும் கைத்தறி துணிகள் போன்றன இந்த வர்த்தகச் சந்தையில் விற்பனைக்காக காட்சிபடுத்தப்பட்டிருந்தன.

தற்காலத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையானது ஊக்குவிக்க வேண்டிய ஒன்று என்பதைக் கருத்தில் கொண்டு உத்தியோகத்தர்களிடையே சுய பயிர்செய்கையை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் இது நடத்தப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தின் பதில் உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி. எஸ். சிவஷங்கரின் வழிகாட்டலின் கீழ் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவினரின் ஒத்துழைப்புடன் விவசாயம் சார்ந்த தகவல்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் மற்றும் தகவல் திரட்டுகள் என்பனவும் பங்கபற்றியோருக்கு விநியோகிக்கப்பட்டன.

# அலிசாஹிர் மௌலானா எம்.பி. மட்டக்களப்பில் கௌரவிப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடியில் ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவைக் கௌரவிக்கும் சனிக்கிழமை மாலை புதிய காத்தான்குடியில் நடைபெற்றது.

ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் அமைப்பின் தலைவர் மௌலவி எச்.எம்.ஸாஜஹான் பலாஹி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானாவைக் கௌரவிக்கும் வகையில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கப்பட்டது.



பரீட்சைகளில் சித்தியடைந்த காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் அமைப்பின் உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கும் இதன் போது பரிசில்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் யு.எல்.எம்.முபீன் காத்தான்குடி நகரசபை முன்னாள் தவிசாளர் மர்சூக் அகமட் லெவ்வை, ஏறாவூர் நகர சபை முன்னாள் தவிசாளர் நழீம் உட்பட காத்தான்குடி ஆலோசனைக்கும் வழிகாட்டலுக்குமான ஆலிம்கள் அமைப்பின் செயலாளர் மௌலவி மன்சூர் பலாஹி மற்றும் அதன் உறுப்பினர்கள் உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பாலஸ்தீன தூதரகத்தில் கிறிஸ்மஸ் தின நிகழ்வு

(எம்.ஏ.ஏ.அக்தார்)



கொழும்பில் உள்ள பாலஸ்தீன தூதரகத்தில் கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் பாலஸ்தீன தூதர் கலாநிதி செய்யத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் பிரதம அதிதியாக அருட் தந்தை மல்கம் கார்டினர் ரஞ்சித் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய நாடுகளின் தூதர்கள், விசேட அழைப்பாளிகள், கிறிஸ்தவ பாதிரியார்கள் கலந்து கொண்ட நிகழ் வில் பாலஸ்தீன தூதுவர் சமய அனுஸ்டானங்களில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்கினார்.





# மண்முனை கோட்ட மாணவர்களது பாதணி வவுச்சர்கள் அதிபர்களிடம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பாதணி வவுச்சர்கள் பாடசாலையின் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள மாணவர்கள் இலவசமாக பாதணிகளை பெறும் வகையில் வவுச்சர் வழங்கும் திட்டம் கல்வி அமைச்சால் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கமைய மண்முனை தென்மேற்கு கோட்டத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கான வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

மண்முனை தென்மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் மூ.உதயகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், மட்டக்களப்பு மேற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான செ.மகேந்திரகுமார், ரி.யசோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதணிகளுக்கான வவுச்சர்களை, பதிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களில் கொடுத்து மாணவர்கள் பாதணிகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதன்போது, வவுச்சர்களை மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பான விளக்கங்களும் அதிபர்களுக்கு அளிக்கப்பட்டன.



# இளைஞர் சமாதான பரப்புரையாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட மத ஸ்தலங்களுக்கு!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் இளைஞர் சமாதான பரப்புரையாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட மத ஸ்தலங்களுக்கு விஜயம் செய்துள்ளனர்.

விருத்தி வலையமைப்பு மற்றும் கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன் சமாதானத்தையும் இன நல்லிணக்கத்தையும் சமூக வலைத்தளங்களின் ஊடாக ஊக்குவித்தல் என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வரும் இளைஞர் சமாதான பரப்புரையாளர்கள் ஏறாவூரில் 3 மத ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்தனர்.



ஒற்றுமை மற்றும் இனங்களுக்கு இடையிலான சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம், நல்லிணக்கத்தை கட்டி எழுப்பதில் உள்ள சிக்கல்கள், மதங்களில் வலியுறுத்தப்பட்ட படி சமாதானமாக வாழ்வதன் முக்கியத்துவம் தொடர்பாக மதத் தலைவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர். இளைஞர்களால் தென்னை மரக்கன்றுகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் புனரமைப்பு

**(எம்.எம்.றம்ஸீன்)**

இறக்காமம், குடுவில் பிரதேசத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புக் கூட்டம் குடுவில் பிரதேச அமைப்பாளர் எம்.எம்.நஸார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, மாவட்ட குழுவின் செயலரும் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ. சமால்டீன், அரசியல் அதி உயர்பீட உறுப்பினர் ஆசிரியர் ஏ.றியாஸ், இறக்காம பிரதேச சபை உறுப்பினர்களான என்.எம்.ஆசீக், எம்.எல்.முஸ்னி மற்றும் கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.





# காத்தான்குடியில் வளர்ந்துவரும் சுற்றுலா தொடர்பான ஆராய்வு!

(எம்.எம்.றம்ஸீன்)

காத்தான்குடியில் அடுத்த தலை முறைக்காக இயற்கை வளங்களை சேமிப்போம் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட காத்தான்குடியில் வளர்ந்து வரும் சுற்றுலா தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம் பெற்றது.

நிறுவனத்தின் தலைவரும், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழ கத்தின் வியாபார பொருளியல் துறைப் பேராசிரியருமான கலாநிதி ஏ.எம். எம். முஸ்தபா தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன் போது காத்தான்குடியில் வளர்ந்து வரும் சுற்றுலாத் துறையை சமூக, கலாசார மற்றும் மார்க்க விழு மியங்களுக்கு ஊடாக கட்டியெழுப்பி, வியாபார மற்றும் தொழில் வாய்ப்புக் களை மேம்படுத்தல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இந்தியாவின் கேரளா, பெங்களூர், தமிழ்நாடு மற்றும் திருநெல்வேலி, மதுரை நகரங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் சுற்றுலா மற்றும் பொருளியல்துறைப் பல்கலைக் கழக பேராசிரியர்கள் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான பல்வேறு ஆலோசனை களையும், கருத்துக்களையும் வழங் கினர்.

நிகழ்வில் காத்தான்குடியிலுள்ள பல்வேறு சிவில் சமூக நிறுவனங்களை யும் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# வெட்டுக் காயங்களுடன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி!

(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலிபண்ட் தோட்டப் பகுதியில் கத்தி வெட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுடன் ஒருவர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நபர் நுவரெலியா குற்றத் தடுப்பு பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒலிபண்ட் தோட்டத்தை சேர்ந்த நான்கு பேரை நுவரெலியா பொலிஸார் கைது செய் துள்ளனர். சந்தேகத்தின் பேரில் அவர் களைக் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒலிபண்ட் தோட்டம் கீழ் பிரிவுக்கு உட்பட்ட இலக்கம் 05 தேயிலை மலை யில் 05 ஏக்கர் நிலத்தைத் தனி நபர் ஒருவருக்கு கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்வதற்கு தோட்ட நிர்வாகம் குத்தகைக்கு வழங்கியுள்ளது.



குத்தகை காலம் முடிந்த நிலையில் இவ் விவசாய நிலத்தை தோட்ட நிர் வாகத்துக்கு வழங்குவதில் குத்தகைக்கு பெற்றவர்களுக்கும், தோட்ட நிர்வாகத் துக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற் பட்டுள்ளன.

இதையடுத்து நிலம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது.

இதன் அடிப்படையில் குத்தகைக் காரராண தனி நபர் குத்தகை அடிப் படையில் பெற்ற கொண்ட நிலத்தை மீண்டும் தோட்ட நிர்வாகத்திற்கு வழங்க வேண்டும் என நுவரெலியா நீதி மன் றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குத்தகைக் கார ரான தனி நபர், தான் விவசாயம் செய்து வந்திருந்த தோட்ட காணியை விலகி அங்கு வைக்கப்பட்டிருந்த விவசாய பொருள்களை அகற்றுவதற்கு கால தாமதம் ஏற்படுத்தியுள்ள நிலையில் அந்த நிலத்தை நீதிமன்ற உத்தரவின் பேரில் பொறுப்பேற்ற தோட்ட நிர்வாகம் மீண்டும் அந்த நிலத்தில் தேயிலை கன்றுகளை தற்போது பயிரிட்டுள்ளது.

அதே நேரத்தில் விவசாய நிலத்திலி ருந்து அகற்றபடாத தனது விவசாய பொருள்களைப் பாதுகாக்க அந்த விவசாய நிலத்தை மேற்பார்வை செய்து வந்த ஒலிபண்ட் தோட்ட நபர் ஒருவரை காவலிலும் ஈடுபடுத்தி இருந்தார்.

இந்த நிலையில் கத்தி குத்து சம்பவம் இடம்பெற்றுள்து. நுவரெலியா பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




# கல்முனை மலேரியா பிரிவின் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

(ஆதம்)

கல்முனை பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவின் நலன்புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (17) அக்கரைப்பற்றில் இடம்பெற்றன.

மலேரியா தடை இயக்க பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌஷாத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகவும், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதியட்சகர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பிராந்திய பொதுச் சுகாதார மற்றும் தர முகாமைத்துவ பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.ஹில்மி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கணக்காளர் திருமதி உசைனா பாரிஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையில் நடத்தப்பட்ட தெரிவின் பிரகாரம் பிராந்திய மலேரியா தடை இயக்க பிரிவில் திறம்பட பணியாற்றிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் இந்த நிகழ்வின் போது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



18 வருடங்கள் இந்தப் பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்ற என்.சந்திரலிங்கம் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த பிரிவு உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும் இந்த நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக அண்மையில் பதவியேற்று பணியாற்றி வருகின்ற டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸடீன் இந்த நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராகப் பணியாற்றி பிராந்திய சுகாதாரத்துறைக்கு அளப்பெரிய சேவையாற்றிய டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் உள்ளிட்ட பலர் இதன்போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்முனை பிராந்திய மலேரியா தடை இயக்கப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்நௌஷாத் எழுதிய "பேகம் கதீஜாவின் சாமானிய ஜீவிதம்" நூலின் பிரதி ஒன்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு இந்த நிகழ்வின் போது வழங்கப்பட்டது.

# சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் கடமையேற்பு!

(அபு அலா )

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நியமிக்கப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம் நேற்று முன்தினம் (18) சுகாதார அமைச்சின் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



# தென்கிழக்கு கல்விசாரா ஊழியருக்கு இலகு முகாமைத்துவ பயிற்சி பட்டறை!





(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக தொழிலாளர் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்திருந்த “Essential Soft Skills for Management Assistants and Allied Grade Staff” என்ற தொனிப் பொருளிலான பயிற்சி பட்டறை ஒன்று காஞ்சிரங்குடா கால்நடை வளர்ப்பு விவசாய பயிற்சி நிலையத்தில் தொழிலாளர் மேம்பாட்டு மையத்தின் தலைவர் பேராசிரியர் சல்பியா உம்மா தலைமையில் இடம்பெற்றது.

ஊழியர்கள் தங்களது கருமங்களை இலகுவாக ஆற்றுவதற்கான பல்வேறு யுக்திகளை பயிற்சி பட்டறையின் வளவாளர்களாகக் கலந்து கொண்ட பேராசிரியர் எம்.சி.ஏ. நாசர், மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா ஹசன் எம்.ஜி. கலாநிதி எம்.ஜ. நௌபல் ஆகியோர் எடுத்துக் கூறினார். தென்கிழக்கு பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களில் 50 பேர் குறித்த வதிவிட பயிற்சி பட்டறையில் இணைந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக அலுவலக கடமைகளில் ஈடுபட்டு வருவதால் ஏற்படும் சோர்வு நிலை போக்கி ஊழியர்கள் ஓரிடத்தில் ஒன்று கூடியதால் தாங்களிடையே அன்னியோன்யம் மேலும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.



# மட்டு. செயலக ஒன்று கூடலும் பிரியாவிடையும்

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக வருட இறுதி ஒன்று கூடலும் பிரியாவிடை வைபவமும் மாவட்ட மேலதிக அரச அதிபரும் நலன்புரிச் சங்கத் தலைவியுமாகிய திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

பதவியுயர்வு, இடமாற்றம் பெற்றுச் செல்லும் முன்னாள் அரச அதிபர்களான மா.உதயகுமார், கே.கருணாகரன் மற்றும் இடமாற்றம், ஓய்வுபெற்றுச் செல்வொர் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் சிறந்த சேவைக்கான பாராட்டும் பரிசில் வழங்கி கௌரவிப்பும் இடம்பெற்றன. உத்தியோகத்தர்களால் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.









# மட்டக்களப்பு செயலக ஒளி விழா நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக ஒளி விழா நிகழ்வானது மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலக வளாகத்தில் இடம் பெற்றது.

அதிதிகளின் மங்கல விளக்கு ஏற்றலுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அருட்தந்தையர்களான எம். ஸ்னிஸ்லஸ் மற்றும் பி.அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ் உலகின் சாந்தி சமாதானம் பிறக்க வேண்டும் என்பதற்காக அவதரித்த கிறிஸ்துவின் பிறப்பினை கொண்டாடும் விதமாக ஒளி விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட செயலக நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த நிகழ்வில், உத்தியோகத்தர்களால் கரோல் கீதம் இசைக்கப்பட்டது. சிறார்களின் கண்கவர் கலை நிகழ்வுகளும், சிறப்பு சொற்பொழிவும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் இதன்போது கலந்து கொண்டனர். உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கற்றல் உபகரண தேவைப்பாடுள்ள பிள்ளைகள் சிலருக்குப் புத்தகப் பை வழங்கப்பட்டது.

# சாய்ந்தமருது பாலர் பாடசாலை மாணவர்களின் விடுகை விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)



சாய்ந்தமருது கிட்ஸ் வொய்ஸ் பாலர் பாடசாலையின் வருடந்த பரிசளிப்பு நிகழ்வும், விடுகை விழாவும் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் மண்டபத்தில் இடம்பெற்றன.


இந்த நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகளும் மேடையேற்றப் பட்டன.

# இணைந்த கரங்கள் உதவித் திட்டத்தில் சின்னடம்பன் முன்பள்ளிக்கு உதவி

(அஸ்ஹர் இப்றாஹிம்)



அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வவுனியா, கனகராயன்குளம் பிரதேசத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த சின்னடம்பன் முன்பள்ளிக்குத் தேவையாக இருந்த கதவு மற்றும் ஏனைய வசதியை இணைந்த கரங்கள் அமைப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.



# அச்சுறுத்தலாக உள்ளது நவீன விஞ்ஞான வளர்ச்சி!

சமயத்துக்கும் மனித ஒழுக்கத்துக்கும் நவீன விஞ்ஞானம் ஓர் அச்சுறுத்தலாக உள்ளது.

சமயமும் மனித ஒழுக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகவே காணப்படுகின்றது. சமயத்தை மனிதன் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு நெறிகளுடன் பின்பற்றி வருகின்றான். ஆரம்ப காலங்களில் மனித நடத்தைகளை கட்டுப்படுத்தும் செயற்பாட்டுடன், ஒழுக்கமான வாழ்வியலை ஏற்படுத்தும் நிலையுடன் மனிதனுக்கு ஒழுங்குபடுத்தும் ஓர் கருவூலமாக சமயம் காணப்படுகின்றது.

சமயங்களைப் பொறுத்தவரையில் கீழைத்தேய சமயங்களாக இருப்பினும் சரி மேலைத்தைய சமயங்களாக இருப்பினும் சரி அவை மனித மேம்பாட்டுத் தன்மையை உயர்த்தும் நோக்கில் மனித நேயத்தை மனிதன் உருவாக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் பல்வேறான ஒழுக்கக் கருத்துக்களை மீறி உரைகளாகக் கொண்டு விளக்குகின்றன. எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரு மனிதன் இன்னும் ஒரு மனிதனுக்கு விதமான இடர்பாடுகளையும் வழங்க கூடாது. அவ்வாறான செயற்பாடுகள் குற்றங்கள் எனவும் அக் குற்றங்களுக்குப் பொதுவாக இறைவனால் தண்டனை கொடுக்கப்படும் எனவும் சமயங்களில் கூறப்படுகின்றன.

இவ்வாறான நிலைகளில் நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது சமயத்துக்கும் மனித ஒழுக்கத்துக்கும் இடையில் ஓர் அச்சுறுத்தலை உருவாக்குகின்றது.

ஏனெனில் மனிதனிடத்தில் ஒழுக்கம் என்ற தன்மைக்குள் பல விடயங்கள் காணப்படுகின்றன. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப சாதனத்தின் வளர்ச்சியானது மனிதனுடைய நடத்தைகளை மிகவும் இடர்பாட்டுக்குள் கொண்டு செல்கின்றது. அதாவது இலத்திரனியில் சாதனங்களின் உருவாக்கத்தால் பல்வேறான தீய சிந்தனைகள் மனிதனுக்கு ஊட்டப்படுகின்றன. இலத்திரனியில் சாதனங்களாகக் காணப்படுகின்ற தொலைக்காட்சி, கணினி இலத்திரன்கள் வலை அமைப்புகள் தொலைபேசிகள் போன்றவை எல்லாம் வியாபார நோக்கம் கொண்டவையாகவும் அமையப் பெறுவதால் மனிதனுடைய மன உணர்ச்சிகளைத் தூண்டி இவை உளவியல் ரீதியாக வர்த்தகத்தை மேற்கொள்கின்றன.

எந்தக் கருத்துக்களை பரிமாற்றம் செய்வதற்கும் பெண்கள் ஆபாச ரீதியான காட்சிகளுடன் முதன்மை படுத்தப்பட்டு வியாபாரம் செய்யப்படுகிறார்கள். இவை எல்லாம் பாலியல் ரீதியான நடத்தைகளை மனிதனுக்கு தூண்டுகின்றது. அது மட்டுமின்றி மனிதனுக்கு மிகவும் முதன்மையான உறவாக கூறப்படுவது திருமண உறவு, குழந்தை பாக்கியம் என்பனவாகும்.

இவற்றின் அடிப்படையில் பரிசோதனை குழாய் குழந்தை என்பதையும் விஞ்ஞான ரீதியான தன்மையில் உருவாக்கப்படுகின்றது. இவை பற்றிய கருத்தாக்கங்களும் மனித நடத்தையின் ஒழுக்கத்தை மீறிச் செல்லும் செயலாகக் காணப்படுகின்றது.



நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளால் ஆயுதங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாயுதங்கள் மனிதனுடைய உயிர்களைப் பறிக்கின்றன. ஓர் உயிரானது இறைவனால் படைக்கப்படுகின்றது என்பது எல்லா சமயங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற விடயமாகும். வியாபார ரீதியில் நாடுகள் ஆயுதங்களை விற்பனை செய்கின்றன. இவை ஓர் அழிவுகளை கொடுக்கும் தன்மை கொண்டவை ஆகும்.

மனிதன் வாழும் சூழல் இறைவனால் அழகாகப் படைக்கப்பட்டிருப்பது முக்கியமானதொரு விடயமாகும். இதனைச் செயற்கையான ரீதியாக செய்யும் ஆயுத பாவனைகள் பணத்துக்காக விலை மதிக்க முடியாத உயிரை கூட தர்மம் என்ற ரீதியில் இருந்து பாதை தவறிச் செல்கின்ற தன்மை இணை செய்கின்றது.

இதனால் நாடுகளுக்கு இடையே அமைதியின்மை, சுதந்திரமின்மை, பயங்கரவாதம், அடிமையான வாழ்வு, மனிதனை மிருகமாக பார்க்கும் தன்மை, மனிதநேயம் இல்லாத தன்மை போன்றவை காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி மருத்துவம் என்ற ஒழுக்க ரீதியான தொழிலானது மனிதனது உயிரைக் காப்பாற்றும் ஒரு புனிதத் தொழிலாகக் காணப்படுகின்றது. இந்தத் துறைக்கும் நவீன விஞ்ஞானம் முன்னேற்றத்தின் அடிப்படையில் வியாபார நோக்கத்தை மையப்படுத்தி போலியான மருந்துகள் உருவாக்கப்படுவதையும் இதனால் மனிதர்கள் இறக்கும் நிலைமையும் காணப்படுகிறது. நவீன வசதியான விஞ்ஞான தொழில்நுட்பம் கொண்ட வைத்தியசாலைகளில் மனிதனுடைய உறுப்புக்கள் களவாடப்பட்டு விற்கப்படுவதும் மனிதனுடைய நடத்தைக்குப் பங்கம் செய்யும் ஒன்றாகவே உள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் எங்கு பார்த்தாலும் பிறழ்வையே ஏற்படுத்தி நிற்கிறது.

**முஹமட் நிஜாம் அஃப்றின்,**
**மெய்யியல் துறை,**
**பேராதனை பல்கலைக்கழகம்.**



# பெரியநீலாவணை பொலிஸ் ஆண்டிறுதிப் பரிசோதனை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பெரியநீலாவணை மற்றும் சாய்ந்த மருது பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பரிசோதனை பெரியநீலா வணை பொலிஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெ.எச்.எம்.என்.ஜெயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் அணிவகுப்புக்களைப் பார்வையிட்டார்.



இதன் போது, பொலிஸ் நிலையம், பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவை நிலையங்கள், சுற்றுச்சூழல் போன்றவற்றையும் பொலிஸ் அத்தியட்சகர் பார்வையிட்டார். பொலிஸாரால் பயன்படுத்தப்படும் வாகனங்களும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ். கே.வீரசிங்க, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ. சம்சுத்தீன் உட்பட பொலிஸ் பரி சோதகர்கள், பொலிஸ் உத்தியோ கத்தர்கள் பலரும் கலந்து கொண்ட னர்.






# மக்கள் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலைக் கூட்டம்

(ஹஸ்பர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்ட மத்திய குழு கூட்டம் கிண்ணியாவில் நடைபெற்றது.

முன்னாள் பிரதியமைச்சரும் மக்கள் காங்கிரஸின்தேசியஅமைப்பாளருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பின ருமான ரிசாட் பதியுதீன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். எஸ். அமீர் அலி, கட்சியின் உயர் பீட உறுப் பினர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா உட்பட முன்னாள் உறுப்பினர்கள், கட்சி யின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கிண்ணியா அல்ஹீரா மீனவர் கூட்டுறவு சங்கத்தில் இடம் பெற்ற கடற்றொழிலாளர்களு டனான கலந்துரையாடலில் அவர்களது பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப் பினர் ரிசாத் பதியுதீன் கேட்டறிந்தார்.

இதன்போது தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மஹஜர் ஒன்றைம் தொழிலாளர்கள் கையளித்தனர்.

# ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான முருகனை இலங்கைக்கு நாடு கடத்த முடியும்

## - இந்திய மத்திய அரசு அறிவிப்பு



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களில் ஒருவரான முருகனை பிரித்தானியாவுக்கு நாடு கடத்த முடியாது என இந்திய மத்திய அரசு, சென்னை மேல்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

எனினும் அவரை அவரது தாய்நாடான இலங்கைக்கு நாடு கடத்த முடியும் என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு விடுவிக்கப்பட்ட முருகன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை சென்னை மேல் நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் இந்த விடயத்தை மன்றுரைத்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளியேறி பிரித்தானியாவிற்கு செல்வதற்கான பயண ஆவணங்களை முருகன் கோருகிறார்.

ஆனால் அத்தகைய அனுமதி அல்லது வெளியேற உத்தரவை வழங்க முடியாது.

இந்த நிலையில் இலங்கை உயர்ஸ்தானிகரகத்துக்கு இந்திய வெளியுறவுத்துறை அவரது ஆவணங்களை அனுப்பியுள்ளது எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இலங்கை உயர்ஸ்தானிகரகம், மனுதாரருக்கு கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணங்களை வழங்கினால் மட்டுமே, இந்திய வெளியுறவு அமைச்சு அடுத்த கட்ட நடவடிக்கைகளை தொடரமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முருகன், திருச்சியில் உள்ள வெளிநாட்டவர்களுக்கான சிறப்பு முகாமில் முருகன் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவர் பிரித்தானியாவில் உள்ள தனது மகளுடன் வெளிநாடு செல்ல அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

இந்த நிலையில் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளுக்காக முருகன் சென்னைக்கு வரும் போதெல்லாம் அவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று மாநில அரசுக்கு உத்தரவு பிறப்பித்து, முருகனின் இந்த மனுவை சென்னை மேல்நீதிமன்ற நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# நடிகை கங்கனா ரனாவத் மக்களவை தேர்தலில் போட்டி



2024 ஆம் ஆண்டுக்கான மக்களவை தேர்தலில் நடிகை கங்கனா ரனாவத் களமிறங்கவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் இந்த தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் வேற்பாளராக களமிறங்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நடிகை கங்கனா ரனாவத் மக்களவை தேர்தலில் போட்டியிடவுள்ள விடயத்தை அவரது தந்தை உறுதிப்படுத்தியுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

# வெள்ள நீரில் மிதந்து வந்த சடலத்தால் பரபரப்பு!

தமிழகத்தில் பெய்து வரும் கன மழைகாரணமாக நெல்லை , தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நெல்லையில் தேங்கியுள்ள மழை வெள்ளத்தில், அடையாளம் தெரியாத நபர் ஒருவரின் உடல் மிதந்து வந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, அந்த சடலத்தை மீட்புப் படையினர் மீட்டுள்ள நிலையில், உயிரிழந்தவர் யார் என்பதைக் கண்டறிய பொதுமக்கள் உதவிசெய்ய வேண்டுமென பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.



# 2024 ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் போட்டியிட தடை!

## - கொலராடோ உச்சநீதிமன்றம் உத்தரவு



2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுவதற்கு கொலராடோ உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அரசியலமைப்பின் கிளர்ச்சி என்ற வாக்கியத்தை குறிப்பிட்டுக்காட்டி, ட்ரம்ப் ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமான வேட்பாளர் அல்லவென நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் 3 ஆவது பிரிவின் கீழ், ஜனாதிபதி வேட்பாளரொருவர் தகுதி நீக்கம் செய்யப்படுவது இதுவே முதல்தடவையாகும் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

எவ்வாறாயினும் இந்த தீர்ப்பு மீதான மேன்முறையீடு அடுத்த மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த தீர்ப்பு கொலராடோ மாநிலத்திற்கு வெளியே எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை 2024 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து தடுப்ப தற்கு பல்வேறு மாநிலங்களில் மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி யடைந்திருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

# காசாவில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ஐ.நா. பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்பு

காசாவில் போர் நிறுத்தத்தை வலி யுறுத்தி ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இடம்பெறவிருந்த வாக்கெடுப்பு தாமதமடைந்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை மீது இவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப் படவிருந்தது.

இந்த வாக்கெடுப்பு இலங்கை நேரப் படி நேற்றிரவு நடத்தபடவிருந்தது.

எனினும் இது தொடர்பான விவாதம் நிறைவடையாமையால் அந்த வாக் கெடுப்பு தாமதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக் கின்றன.



இதன்படி, காசாவில் போர் நிறுத் தத்தை வலியுறுத்தும் யோசனை மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் வாக்கெடுப்பு இன்றிரவு நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# விமானியின் சாதுர்யத்தால் காப்பாற்றப்பட்ட 180 பயணிகள்!

மலேசிய தலைநகர் கோலாலம் பூரிலிருந்து திருச்சி வரை பயணித்த மலிண்டோ ஏர்லைன்ஸ் விமானம் தரையிறங்குவதற்கு ஆயத்தமான நிலையில் விமானத்தின் ஒரு சில்லில் காற்று இல்லாமல் போனதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து உடனடியாக திருச்சி விமான நிலையத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு விமானிகள் தகவல் அனுப்பி யுள்ளனர். இந்த நிலையில், உடனடியாக விமானம் தரை இறங்க தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள விமான நிலைய ஊழியர்களுக்கு அறிவுறுத்தினர்.

அத்துடன், தீயணைப்பு வாகனங் கள் உற்பட அனைத்து பாதுகாப்பு ஏற் பாடுகளும் உடனடியாக முன்னெடுக் கப்பட்டன. இதனை தொடர்ந்து விமானி களும் சாதுர்யமாக செயல்பட்டு, வேக கட்டுப்பாட்டுடன் விமானத்தை தரை இறக்கினர். இதனால் பாதுகாப்பான முறையில் விமானத்தில் பயணித்த 180 பயணிகளும் காப்பாற்றப்பட்டனர்.